# TAMIL B
# தமிழ் B

Singapore-Cambridge General Certificate of Education
Ordinary Level (2021)
(Syllabus 1152)

## 1. மதிப்பீட்டு நோக்கங்கள்

கல்வி அமைச்சின் பாடக்கலைத்திட்ட வரைவு, மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட உயர்நிலைப்பள்ளிக்கான தமிழ்மொழிப் பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம், ஏற்கெனவே அடைந்துள்ள அடிப்படை மொழித் திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். பின்வரும் நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர்கள் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும்.

### 1.1 **கேட்டலும்/நோக்கலும்**

- கட்டளைகளுக்கு ஏற்பச் செயல்படுதல்
- தகவல்களைப் புரிந்துகொண்டு செயல்படுதல்
- பாடப்பொருளைத் தமது முன்னறிவோடு இணைத்துக் கூறுதல்
- புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 1.2 **பேசுதலும் பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றமும்**

- பொருத்தமான குரல் ஏற்ற இரக்கத்துடனும் சரியான உச்சரிப்புடனும் தெளிவாகப் பேசுதல்
- சூழலுக்கு ஏற்பப் பேசுதல்
- பல்வேறு கருத்துகளையும் உணர்வுகளையும் நோக்குகளையும் பயன்முனைப்புமிக்க முறையில் கருத்துப்பரிமாற்றம் செய்தல்
- மற்றவர்களின் நோக்கங்களைப் புரிந்துகொண்டு பதிலளித்தல்

### 1.3 **படித்தல்**

- தெளிவாகவும் சரளமாகவும் வாய்விட்டுப் படித்தல்
- தகவல்கள் அல்லது கருத்துகளைத் தேடிச் சேகரித்தல்
- பனுவலின் கருத்தை/பொருளை அறிதல்

### 1.4 **எழுதுதலும் எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றமும்**

- கொடுக்கப்படும் மின்னஞ்சல் தலைப்புக்கேற்பவோ தலைப்புக் கட்டுரைக்கேற்பவோ தம் கருத்துகளைப் பொருத்தமாகவும் சரியான மொழியமைப்புடனும் எழுதுதல்

## 2. தேர்வு அமைப்புமுறை

இத்தேர்வு மொத்தம் மூன்று வினாத்தாள்களைக் கொண்டது.

**வினாத்தாள் 1 : (50 நிமிடங்கள்)**

**கட்டுரை**

இத்தாளில் இரண்டு கட்டுரைத் தலைப்புகள் இடம்பெறும். ஒன்று மின்னஞ்சல்; மற்றது படத்தொடரை அடிப்படையாகக்கொண்ட கட்டுரை. இரண்டு தலைப்புகளுள் ஏதேனும் ஒன்றினைப்பற்றி 100 சொற்களுக்குக் குறையாமல் விடையளிக்கவேண்டும். தேர்வெழுதுவோர் ‘முரசு அஞ்சல்’ மென்பொருளைப் பயன்படுத்திக் கட்டுரையைக் கணினிவழி தட்டச்சுச் செய்யவேண்டும்.

**வினாத்தாள் 2 : (1 மணி நேரம்)**
இத்தாளில் ‘அ’, ‘ஆ’, ‘இ’ ஆகிய பிரிவுகள் இருக்கும்.

**‘அ’ பிரிவு (தெரிவுவிடை முன்னுணர்வுக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் ஓர் உரைநடைப் பகுதியிலிருந்து பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘ஆ’ பிரிவு (கருத்துவிளக்கப்படக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் 1-3 கருத்துவிளக்கப் படங்கள் கொடுக்கப்படும். அவற்றிலிருந்து ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளுள் மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

**‘இ’ பிரிவு (தெரிவுவிடைக் கருத்தறிதல்)**

இப்பிரிவில் கதை வடிவிலான பனுவல் ஒன்று இடம்பெறும். அதையொட்டி ஐந்து தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒவ்வொரு வினாவுக்கும் கொடுக்கப்பட்டுள்ள நான்கு தெரிவுகளில் மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்கவேண்டும்.

## வினாத்தாள் 3

இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளை உள்ளடக்கியது. அவை வாய்மொழித் தேர்வு மற்றும் கேட்டல் கருத்தறிதல் ஆகும்.

### வாய்மொழித் தேர்வு

இத்தேர்வு கீழ்க்காணும் இரண்டு கூறுகளை உள்ளடக்கியது.

1 வாய்விட்டு வாசித்தல்
2 ஒளிக்காட்சி ஊக்கக்கூறு (video stimulus) துணைகொண்டு உரையாடுதல்

### வாசித்தல்

கணினித்திரையில் இடம்பெறும் ஒரு வாசிப்புப் பகுதியை மாணவர் வாய்விட்டு வாசிக்கவேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசைநயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### ஒளிக்காட்சி ஊக்கக்கூறு துணைகொண்டு உரையாடுதல்

மாணவர் கொடுக்கப்படும் ஓர் ஒளிக்காட்சியைப் பார்க்கவேண்டும். பின்னர், தேர்வாளருடன் அதன் தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடவேண்டும். கேட்பவர் புரிந்துகொள்ளும் வகையில் கருத்துகளை விவரிக்கும் திறன், உரையாடலின் சரளம், பயன்படுத்தும் மொழியின் பொருத்தப்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும்.

### கேட்டல் கருத்தறிதல்

செய்தி, உரையாடல், கதை, விளம்பரம், அறிவிப்பு முதலான தலைப்புகளில் நான்கு குறும்பனுவல்களும் மூன்று நெடும்பனுவல்களும் இடம்பெறும். அவற்றையொட்டிப் பத்துத் தெரிவுவிடை வினாக்கள் கேட்கப்படும். ஒரு தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. பனுவல்களையும் வினாக்களையும் செவிமடுத்த பின்னர் வினாக்களுக்கு விடையளிக்கவேண்டும்.

# 3. தேர்வு விவர அட்டவணை

**சிங்கப்பூர்-கேம்பிரிட்ஜ் பொதுக் கல்விச் சான்றிதழ்**
**சாதாரண நிலைத் தேர்வு**
**தமிழ் B (1152)**

<table>
<tr><th>தாள்</th><th>பொருளடக்கம்</th><th>வினா வகை</th><th>வினாக்களின் எண்ணிக்கை</th><th>விடையளிக்க வேண்டிய வினாக்களின் எண்ணிக்கை</th><th>மதிப்பளவு</th><th>குறிப்புகள்</th></tr>
<tr><td rowspan="3">தாள் 1<br>கட்டுரை<br>(50 நிமிடங்கள்)<br><br>[100 சொற்களுக்குக் குறையாமல்]</td><td>மின்னஞ்சல் எழுதுதல்</td><td rowspan="2">சுயவிடை வினா</td><td rowspan="2">2</td><td rowspan="2">1</td><td rowspan="2">20%</td><td rowspan="3">கணினிவழி விடை எழுதுதல்</td></tr>
<tr><td>படத்தொடர் துணைகொண்டு கட்டுரை எழுதுதல்</td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>2</td><td>1</td><td>20%</td></tr>
<tr><td rowspan="4">தாள் 2<br>மொழிப் பயன்பாடும் கருத்தறிதலும்<br>(1 மணி)</td><td><u>‘அ’ பிரிவு</u><br>முன்னுணர்வுக் கருத்தறிதல்</td><td>தெரிவுவிடை வினா</td><td>10</td><td>10</td><td>10%</td><td rowspan="4"></td></tr>
<tr><td><u>‘ஆ’ பிரிவு</u><br>கருத்தறிதல் 1</td><td>தெரிவுவிடை வினா</td><td>5</td><td>5</td><td>10%</td></tr>
<tr><td><u>‘இ’ பிரிவு</u><br>கருத்தறிதல் 2</td><td>தெரிவுவிடை வினா</td><td>5</td><td>5</td><td>10%</td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>20</td><td>20</td><td>30%</td></tr>
<tr><td rowspan="4">தாள் 3<br>வாய்மொழியும் கேட்டல் கருத்தறிதலும்</td><td><u>‘அ’ பிரிவு</u><br>வாய்விட்டு வாசித்தல்</td><td></td><td>1</td><td>1</td><td>10%</td><td>கணினித் திரையைப் பார்த்து வாசித்தல்</td></tr>
<tr><td><u>‘ஆ’ பிரிவு</u><br>ஒளிக்காட்சி ஊக்கக்கூறு துணைகொண்டு உரையாடுதல்</td><td></td><td>1</td><td>1</td><td>20%</td><td>ஒளிக்காட்சி (55-60 வினாடிகள்)</td></tr>
<tr><td><u>‘இ’ பிரிவு</u><br>கேட்டல் கருத்தறிதல்</td><td></td><td>10</td><td>10</td><td>20%</td><td></td></tr>
<tr><td>மொத்தம்</td><td></td><td>12</td><td>12</td><td>50%</td><td></td></tr>
</table>